TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8069810

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொகுப்பு பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : திருச்சி PS காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year ஆண்டு : 2021 FIR No. மு.த.அ. எண் : 2/2021 Date நாள் : 08.03.2021

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 (As Amended in 2018) Sections பிரிவுகள்: 7(a) of the Prevention of corruption Act 1988 (As amended in 2018)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 06.03.2021 Date to நாள் வரை :
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 10.00 hrs Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.03.2021 Time நேரம் : 08.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 3 Km வடக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி உதவி பொறியாளர் அலுவலகம், மின்சார வாரியம், திருவானைக்கோவில், திருச்சி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : பெரி. பழனியப்பன் (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் : பெரியகருப்பன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16.02.1958 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் [illegible] (g) Address : முகவரி எண்: 50, அய்யன் தெரு, மங்கா நகர் இல்லம் தென் [illegible], திருவானைக்கோவில், திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ராஜேந்திரன், உதவி பொறியாளர், மின்சார வாரியம், திருவானைக்கோவில், திருச்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 08.03.2021 காலை 08.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி, திருவானைக்கோவில், மனோகரி இல்லம் முதல் தளம், அய்யன் தெரு, எண்.50-இல் வசித்து வரும் பெரியகருப்பன் என்பவர் மகன் திரு.பெரி.பழனியப்பன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, ஸ்ரீரங்கம் டி.என்.இ.பி. வளாகத்தில் உள்ள திருவானைக்கோவில் ஏ.இ. திரு.ராஜேந்திரன் மற்றும் புகார்தாரர் திரு.பழனியப்பன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 08.03.2021 காலை 09.15 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.2/2021 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 08-03-2021 அனுப்புதல் பெரி.பழனியப்பன், த/பெ பெரியகருப்பன்,

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
P. Palani[illegible]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
M. [illegible] 9/3/2021

15. Date & Time of despatch to the court: 08.03.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11.30 hrs

Name: பெயர் M. நவநீத கிருஷ்ணன்,
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருச்சி.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.02/2021ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......</u>

எண்.50, அய்யன் தெரு, மனோகரி இல்லம் முதல் தளம், திருவானைக்கோவில், திருச்சி-5. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. நான் திருச்சி, திருவானைக்கோவில் அய்யன் தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான், திருச்சி, பீமநகரை சேர்ந்த திரு.பாலசந்திரன் என்பவருக்கு சொந்தமான திருச்சி, திருவானைக்கோவில் பைபாஸ் சாலையில் உள்ள ஸ்ரீவாரி பேக்கேஜிங்ஸ் என்ற நிறுவனத்தில் தயாரிப்பு மற்றும் நிர்வாக மேலாளராக கடந்த 8 மாதங்களாக பணியாற்றி வருகிறேன். எங்கள் நிறுவனத்தில் உரச்சாக்குகள் தயார் செய்து விற்பனை செய்து வருகிறோம். எங்கள் நிறுவனத்திற்கு புதிதாக ஆட்டோமெட்டிக் கட்டிங்மிஷின் மற்றும் ஸ்டிச்சிங்மிஷின் உபயோகபடுத்த வேண்டியிருந்தது. எங்கள் நிறுவனத்தில் எண்.06262011460 என்ற மின் இணைப்பில் **5 HP (3.75 kw)** மின்பளு உள்ளது. ஆனால் அதற்கு தேவையான கூடுதல் மின்பளு வேண்டி எற்கனேவே உள்ள **5 HP (3.75 kw)** மின்பளுவை விட கூடுதலாக **15 HP (11.25 kw)** மின்பளு **(Addl load)** தேவைப்படுவதால், எங்கள் நிறுவனத்தின் ஓனர் திரு.பாலசந்திரன் அவர்கள் அதற்கான விண்ணபத்தை பூர்த்தி செய்து கையொப்பமிட்டு என்னிடம் கொடுத்து ஆன்லையினில் பதிவு செய்யுமாறு சொன்னார். நான் அதன்படி திருவானைக்கோவில் அருகில் உள்ள ஒரு கடையில் 26.1.2021 அன்று ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்து, அதற்கு பதிவு கட்டணமாக ரூ.118/- ஆன்லைன் மூலம் செலுத்தி ரசீது பெற்றேன். ஆனால் ஆன்லைனில் பதிவு செய்த நபர் **Tariff LA 1A** ஆக தவறுதலாக பதிவேற்றம் செய்ததால் எங்களுடைய விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த விபரத்தை ஓனர் திரு.பாலசந்திரன் அவர்களிடம் தெரிவித்து, அவர் சொன்னதின் பேரில், நான் மீண்டும் 2.2.2021 அன்று ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்து, **Tariff LN 3B** -ன்படி பதிவு கட்டணமாக ரூ.118/- ஆன்லைன் மூலம் செலுத்தி ரசீது பெற்றேன். அதன் பின்னர் சுமார் 5 நாட்கள் கழித்து திருவானைகோவில் மின்வாரிய **ADE** மற்றும் **AE** திரு.ராஜேந்திரன் ஆகியோர் எங்கள் நிறுவனத்தை பார்வையிட்டனர். அப்போது **AE** திரு.ராஜேந்திரன் என்னிடம் **Estimate** தொகை ரூ.7,200/- செலுத்திவிட்டால், எங்கள் மின்வாரிய அலுவலர்கள் மதிப்பீடு தயார் செய்துவிடுவார்கள் என்று தெரிவித்தார். மேற்படி மின்வாரிய அலுவலர்கள் சொன்னதை அன்றே எங்கள் ஓனரிடம் தெரிவித்தேன். அவர் சொன்னதின்பேரில் நான் கடந்த 10.2.2021 அன்று ரூ.7,200/-ஐ ஆன்லைன் மூலம் செலுத்தி ரசீது பெற்றேன். அதன் பின்னர் சில மின்வாரிய அலுவலர்கள் எங்கள் நிறுவனத்தை பார்வையிட்டு, மதிப்பீடு செய்து சென்றனர். புதிதாக ஆட்டோமெட்டிக் கட்டிங்மிஷின் மற்றும் ஸ்டிச்சிங்மிஷின் கொள்முதல் செய்த விபரத்தையும், அவை இயக்கக் கூடிய நிலையில் உள்ளது என்பதையும், மின்வாரிய

அலுவலகத்தில் உள்ள **Readiness Register**-ல் பதிவு செய்யவேண்டும். எங்கள் நிறுவன ஓனர் திரு.பாலசந்திரன் அவர்களுக்கு உடல் நிலை சரியில்லாததால், மேற்படி ரிஜிஸ்டரில் கையெழுத்திட என்னை அங்கீகரித்து, எங்கள் நிறுவன லெட்டர் பேடின் மூலம் கொடுத்த கடிதத்தை நான் கடந்த 2.3.2021 அன்று திருவானைக்கோவில் **AE** திரு.இராஜேந்திரனிடம் கொடுத்தேன். அவர் சொன்னதன்பேரில் அந்த கடிதத்தை மின்வாரிய **C.I**-யிடம் கொடுக்க அவர் அந்த கடிதத்தை பெற்றுக்கொண்டு, என்னிடம் எங்கள் நிறுவனத்திற்கு கூடுதல் மின்பளு கொடுப்பதற்கான **Sanction letter** ஐ என்னிடம் கொடுத்து, நீங்கள் **Development Charge** ஆக ரூ.14,789/- கட்டிவிட்டால், நாங்கள் வந்து கூடுதல் மின்பளுவை கொடுத்துவிடுவோம் என்று சொன்னார். நான் மேற்படி விபரத்தை அன்றே எங்கள் நிறுவன ஓனர் திரு.பாலசந்திரன் அவர்களிடம் தெரிவித்தேன். அவர் சொன்னதின் பேரில் 3.3.2021 அன்று ரூ.14,789/- தொகையை ஆன்லைனில் செலுத்தினேன். இரண்டு நாட்கள் ஆகியும், மின்வாரிய அலுவலர்கள் கூடுதல் மின்பளுவை மாற்றி கொடுப்பதற்கு வராததால், எங்கள் நிறுவன ஓனர் சொன்னதின்பேரில், நான் 6.3.2021 அன்று காலை சுமார் 10.00 மணிக்கு திருவானைக்கோவில் மின்வாரிய அலுவலகத்தில் உள்ள **AE** திரு.ராஜேந்திரனை சந்தித்து **Development Charge**ஆக ரூ.14,789/- கட்டிவிட்ட விபரத்தை தெரிவித்தேன். அவர் என்னிடம், நீங்கள் **Development Charge** ரூ.14,789/-ஐ **application** எண்ணில் கட்டாமல், உங்கள் கம்பெனி சர்வீஸ் எண்ணில் கட்டியுள்ளீர்கள். அதனால் மீண்டும் **Development Charge** ரூ.14,789/-ஐ **application** எண்ணில் கட்டிவிடுங்கள். நீங்கள் தவறுதலாக உங்கள் கம்பெனி சர்வீஸ் எண்ணில் கட்டிய பணம் மாதாந்திர மின் கட்டணத்தில் கழித்து கொள்வார்கள் என்று தெரிவித்தார். சரிங்க சார், பணத்தை இன்றே கட்டிவிட்டால், நீங்கள் எங்கள் நிறுவனத்திற்கு கூடுதல் மின்பளு கொடுத்துவிடுவீர்களா சார் என்று கேட்டேன், அதற்கு **AE** திரு.ராஜேந்திரன் என்னிடம், அது எப்படி கொடுக்க முடியும், நீங்கள் என்னை தனியாக கவனித்தால்தான் கொடுக்க முடியும் என்று சொன்னார். நான் **AE** திரு.ராஜேந்திரனிடம் என்ன சார் கவனிக்கனும் என்று கேட்டேன். அதற்கு அவர், எனக்கு தனியாக ரூ.30,000/- கொடுத்துவிடுங்கள் உங்கள் நிறுவனத்திற்கு வந்து கூடுதல் மின்பளுவை கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். நான் அவரிடம், என்ன சார், கவர்மெண்ட் பீஸ் எல்லாம் கட்டியாச்சு, நீங்க இன்னும் பணம் கேட்கிறீங்க என்று சொன்னேன். அதற்கு **AE** திரு.ராஜேந்திரன் என்னிடம், நான் கேட்ட பணம் ரூ.30,000/- கொடுத்தால், வேலை நடக்கும், இல்லாட்டி வேலை அப்படியே பெண்டிங்ல வச்சுடுவேன் என்று சொன்னார். நான் அவரிடம், அப்போதைக்கு எங்க ஓனர்கிட்ட கேட்டு, வாங்கிட்டு வர்ரேன் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மேற்படி **AE** சொன்ன விபரத்தை

15



எங்கள் நிறுவன ஓனர் திரு.பாலசந்திரன் அவர்களிடம் சொன்னேன். அவர் மாற்றி கட்டிய **Development Charge** ரூ.14,789/-ஐ **application** எண்ணில் கட்டிவிடுங்கள் என்று சொல்லி ரூ.14,789/- என்னிடம் கொடுத்தார். அதன்படி நான் 6.3.2021 அன்று **Development Charge**ஐ கட்டி அதன் விபரத்தை எனது உரிமையாளரிடம் தெரிவித்தேன். அப்போது அவர் என்னிடம், **AE** திரு.ராஜேந்திரன் லஞ்சமாக கேட்ட ரூ.30,000/- எதுவும் கொடுக்க வேண்டாம். நீங்கள் திங்கள் கிழமை காலை என்னை வந்து பார்ங்க என்று கூறினார். அதன்படி இன்று 8.3.2021 காலை 7.00 மணிக்கு சென்று எனது ஓனர் திரு.பாலச்சந்திரனை வீட்டில் பார்த்தேன், அப்போது அவர் எனக்கு உடல் நிலை சரியில்லை, அதனால், நீங்கள் லஞ்ச ஒழிப்பு துறையில் போய் **AE** திரு.ராஜேந்திரன் மீது புகார் செய்யுங்கள் என்று சொல்லி, ரூ.30,000/- பணத்தை கொடுத்தார். எங்கள் நிறுவனத்திற்கு கூடுதல் மின்பளு வழங்க லஞ்சம் கேட்ட திருச்சி, திருவானைக்கோவில் மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் **AE** திரு.ராஜேந்திரன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (PR.Palaniyappan) 08.3.21. Submitted to the Court of Hon'ble Special Judge for the Prevention of Corruption Act cases 1988, Trichy:-. Received this report today (8.3.2021) at 08.30 hrs made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.2/2021 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 09.15 hrs on 8.3.2021. Sd.xxx (M.NAVANEETHAKRISHNAN) 8/3/2021 Inspr of Police, V&AC, Trichy.

M.N [signature] 8/3/2021
Insp. V&AC
Trichy.
(M.NAVANEETHAKRISHNAN)